# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## அவசரக் கூட்ட அறிவிப்பு

**28.03.2018–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

035. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண். 16295/N6/2017,நாள்.10.01.2018ஆம் தேதிய கடிதத்தில் சிறுபான்மையினர் 25 % சதவீதத்திற்கு மேல் வசிக்கும் நகர பகுதிகளில் மத்திய அரசால் வழங்கப்படுகின்ற பல்நோக்கு வளர்ச்சித்திட்டத்தின் கீழ் (Multi Sectoral Development Programme) கல்வி, சுகாதாரம், குடியிருப்புகள், குடிநீர், மின்சாரம் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி நகராட்சியின் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 31317 பேர் வசிக்கின்றனர். இதில் இந்துக்கள் எண்ணிக்கை 18799, சிறுபான்மையினர் (முஸ்லீம் மற்றும் கிருஸ்த்துவர்கள் மற்றும் ஜெயினர்) 12518 இதர பிரிவினர் 551 பேர் வசித்து வருகின்றனர். இதில் சிறுபான்மையினர் 39.97 % சதவீதம் ஆகும். எனவே, மத்திய அரசால் வழங்கப்படுகின்ற பல்நோக்கு வளர்ச்சித்திட்டத்தின்கீழ் (Multi Sectoral Development Programme) கல்வி, சுகாதாரம், குடியிருப்புகள், குடிநீர், மின்சாரம் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்தி பயன்களை பெறுவதற்காக 25 % சதவீதத்திற்கு மேல் ( 38.21% சதவீதம்) சிறுபான்மையினர் வசிக்கும் பகுதி என வந்தவாசி நகராட்சியை அறிவிக்கை செய்யவும் மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்ப ஏதுவாக மாவட்ட அளவிலான குழுவிற்கு பரிந்துரை செய்யவும், தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு.

தீர்மான எண்.035/ நாள். .03.2018

தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம்

036. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.12ல் காதர் ஜண்டா தெரு மெயின்ரோடு பிரதான கழிவுநீர் கால்வாயில் கழிவு மண் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் கழிவுநீர் சரியான முறையில் செல்லாமல் பொது சுகாதாரம் பாதிப்பு ஏற்பட்டதை சரிசெய்ய கழிவுநீர்கால்வாயில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை தூர்வாருதல், மற்றும் சுத்தம் செய்து தருதல் மற்றும் தூர்வாரிய மண்ணை அப்புறப்படுத்துதல் பணிக்கு 08.03.2018–ல் விலைப்புள்ளி கோரியதில் 12.03.2018அன்று வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

விபரம்

| வ.எண். | ஒப்பந்ததாரர் விபரம் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.W.பஷீர், ஒப்பந்ததாரர் | 64000.00 |
| 2. | திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரர் | 64800.00 |
| 3. | திரு.இ.மஜீத், ஒப்பந்ததாரர் | 62000.00 |

அலுவலக குறிப்பு–

1.வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் ரூ.62000/– என குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.இ.மஜீத், ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2.வார்டு எண்.12ல் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதியான காதர்ஜண்டாதெரு பிரதான கால்வாய் கழிவுநீர் அடைப்பு நீக்கம் செய்யவும், தூர்வாரவும், தூர்வாரிய மண்ணை உடனடியாக அப்புறப்படுத்துதல் பணி பொது சுகாதாரம் அவசரம்அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று திரு.இ.மஜீத் ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும், தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.0312/2018/எச்1, நாள்.12.03.2018)

தீர்மானம்.

037.வந்தவாசி நகராட்சி அவசர அவசியத்தினை கருதியும், பொதுமக்கள் புகார் மற்றும் நாளேடுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யவும், குடிநீர் இணைப்பு வழங்க பைப்லைன் இல்லாத பகுதிகளில் சாலை மறியல் நடைபெற்றதையும், தொடர்ந்து கீழ்காணும் பணிகளை 2017–2018ம் நிதியாண்டு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு இலட்சத்தில் ` |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | வார்டு எண்.11ல் கலுங்கு மரைக்காயர் தெருவில் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 9.90 |
| 2 | நகராட்சி பகுதிகளில் வார்டு 6,9,19,24– களிலும் குடிநீர் குழாய் பைப்லைன் அமைக்கும் பணி | 5.50 |
| 3 | வார்டு எண்.19–ல் சீனுவாச நகர் பகுதியில் பள்ளப்பகுதிக்கு கிராவல் மண் நிரப்புதல் பணி. | 4.00 |
| 4 | எச்சூர் குப்பை கிடங்கில் ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின்விசை இறைப்பான் அமைக்கும் பணி | 3.00 |
| 5 | வார்டு எண்.14ல் பழுது அடைந்த சிமெண்ட் சாலைகளை பேட்ச் ஒர்க் செய்தல் பணி. | 3.00 |
| 6 | வார்டு எண்.24ல் விநாயகமுதலி தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 1.65 |
| 7 | வார்டு எண்.6ல் K.S.K நகரில் சிறுபாலம் அமைக்கும் பணி. | 1.00 |
| | மொத்தம் | 28.05 |

<u>அலுவலக குறிப்பு–</u>

மேற்படி பணிகளை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.198/2017/இ1, நாள்.05.03.2018)

தீர்மானம்

038. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அங்காளம்மன் கோயில் திருவிழா வருடாவருடம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டும் அங்களாம்மன் கோயில் திருவிழா வெகு சிறப்பாக கொண்டாட உள்ளதால், அம்மன் தேர்வீதி உலா வருகிறது. தற்போது வார்டு 21, சைக்கிள் வரதராஜன் தெரு மற்றும் வார்டு–1, கோட்டை புதிய காலனியில் சிறுபாலம் பழுது அடைந்துள்ளதால் திருவிழாவின்போது இப்பகுதியில் அம்மன் தேர் வருவது இயலாததாக உள்ளது. எனவே மேற்படி தெருக்களை அவசரம் அவசியம் கருதி, பொதுமக்கள் நலன் கருதியும், நகராட்சி சட்டம் 1920விதி எண்.15ன் கீழ் மேற்கொள்வதற்கு செலவினம் ரூ.1,28,273/–மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். /2018/இ1, நாள்.18.01.2018)

தீர்மானம்

039. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நுண்ணிய உரக்கிடங்கு செயல்படுத்தப்படவேண்டி உள்ளதால் அவ்விடத்தில் உள்ள மின்கம்பத்தை அகற்றிடவும், அதற்காகும் செலவினம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தவும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு மின் வாரியத்திற்கு தொகை செலுத்திட மன்ற ஒப்புதலுக்கு.

(ந.க.எண்.0358/2018/இ1, நாள்.23.03.2018)

தீர்மானம்

040. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வர்ண கலர்களில் விளம்பரம் செய்ய விலைப்புள்ளிகள் கோரவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையரின் ஒப்புதலுக்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வகையில் செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

வந்தவாசி நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வரப்பெற்ற விலை புள்ளிகள் விவரம்.

| வ.எண். | பெயர் மற்றும் விவரம் | வர்ண கலர்களில் சுவர் விளம்பரம் செய்ய ச.அடிக்கு ஆகும் செலவு. |
|---|---|---|
| 1. | வீனு ஆர்ட்ஸ், பெயிண்டிங் கம்பூர் கிராமம், மாங்கொளத்தூர். | ஒரு சதுர அடிக்கு ரூ.80/– (என்பது மட்டும்) |
| 2 | கார்த்திக் ஆர்ட்ஸ், திருவள்ளூர்நகர், கூட்டேரிபட்டு. | ஒரு சதுர அடிக்கு ரூ.90/– (தொண்ணூாறு மட்டும்) |
| 3 | சேகர் ஆர்ட்ஸ், மற்றும் டிசைன்ஸ், ஏகாம்பரம்தெரு, புதுப்பேட்டை, பண்ருட்டி. | ஒரு சதுர அடிக்கு ரூ.100/– (நூாறு மட்டும்) |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வீனு ஆர்ட்ஸ், பெயிண்டிங் உரிமையாளர், திரு.P.சுந்தர் என்பவருக்கு உத்திரவு வழங்கலாம். தோராய உத்தேச செலவினம் ரூ.3.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.204/2018/இ1, நாள்.19.02.2018)

**041. வந்தவாசி நகராட்சி பொது நிதி 2017–2018 கீழ் 28.03.2018அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் வருமாறு.**

1. **பணியின் பெயர்: வார்டு எண்.11ல் கலுங்கு மரைக்காயர் தெருவில் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.990000/–**

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | திரு.S.தர்மதுரை | 17.51% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு.R.கோவிந்தன் | 11.85 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 3. | திரு.S.வீரராகவன் | 30.03% மதிப்பீட்டைவிட குறைவு |

2. **பணியின் பெயர்: நகராட்சி பகுதிகளில் வார்டு 6,9,19,24– களிலும் குடிநீர் குழாய் பைப்லைன் அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.550000/–**

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | திரு.இ.மஜீத் | 11.20% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு.M.அஜீஸ் | 17.63% மதிப்பீட்டைவிட குறைவு |
| 3. | திரு.M.பாஷா | 22.26% மதிப்பீட்டைவிட குறைவு |
| 4. | திரு.R.கோவிந்தன் | 14.72 % மதிப்பீட்டைவிட குறைவு |

3. **பணியின் பெயர்: எச்சூர் குப்பை கிடங்கில் ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின்விசை இறைப்பான் அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.300000/–**

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | திருமதி.ப.சுசீலா | 24.44% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திருமதி.பா.மாலதி | 11.12% மதிப்பீட்டைவிட குறைவு |
| 3. | திரு.M.பாஷா | 22.26% மதிப்பீட்டைவிட குறைவு |
| 4. | திரு.R.கோவிந்தன் | 14.72 % மதிப்பீட்டைவிட குறைவு |

4. **பணியின் பெயர் வார்டு எண்.14 & 17 சன்னதி தெரு மற்றும் சன்னதி புதுதெருவில் பழுது அடைந்த சாலைகளை சிமெண்ட் பேட்ச் ஒர்க் செய்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.300000/–**

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | திரு.பெ.இளங்கோவன் | 18.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு.S.தர்மதுரை | 18.24% மதிப்பீட்டைவிட குறைவு |
| 3. | திரு.ஆ.அஜீஸ் | 20.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| 4. | திரு.R.கோவிந்தன் | 9.97 % மதிப்பீட்டைவிட குறைவு |

5. **பணியின் பெயர் வார்டு எண்.24ல் விநாயகமுதலி தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி மதிப்பீட்டு தொகை ரூ.165000/–**

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | திரு. S.தர்மதுரை | 15.74% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு. R.கோவிந்தன் | 8.10% மதிப்பீட்டைவிட குறைவு |
| 3. | திரு.M.V.காளி | 15.40% மதிப்பீட்டைவிட குறைவு |
| 4. | திரு. ஆ.அஜீஸ் | 24.85 % மதிப்பீட்டைவிட குறைவு |

6. **பணியின் பெயர் வார்டு எண்.6ல் K.S.K நகரில் சிறுபாலம் அமைக்கும் பணி மதிப்பீட்டு தொகை ரூ.100000/–**

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | திரு. ஆ.அஜீஸ் | 18.12% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு.R.கோவிந்தன் | 8.65% மதிப்பீட்டைவிட குறைவு |
| 3. | திரு.M.பாஷா | 13.93% மதிப்பீட்டைவிட குறைவு |
| 4. | திரு. இ.மஜீத் | 11.85 % மதிப்பீட்டைவிட குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத்தொகையை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.198/2017/இ1, நாள். )

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

042. தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**பற்றிய அறிவிக்கை**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82ன் படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்துவரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சொத்துவரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம்–2018 (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83 (1) (சி)–க்கு கீழ்க்கண்டவாறு சட்டத்திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT 1920**

5. In section 83 of the Tamilnadu District Municipalities Act 1920 in sub-section (1)

(1) for clause (c) the following clause shall be substituted, namely:-

"(c ) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government of Municipality or any other local authority or institution alded by the Government and buildings used for Charitable purpose of sheltering the destitute of animals and orphanages, homes and schools for the deaf and dump, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council.
Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for Conducting self-financing courses shall be subject to levy of property tax".

(2) In the proviso for the Expression "clauses (a) (c) and (e)" the expression "Clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக வந்தவாசி நகராட்சி சிறப்பு அதிகாரி / மன்ற தீர்மான எண்.42, நாள்.28.03.2018—ல்

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி)—ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி)—ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி)—ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்துவரியாக விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி)—ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017—2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78 (3)—ன்படி ஆட்சேபனைகள் அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமிதி அளித்துள்ளது.

இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78 (3)—ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு குறித்து ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அதனை, குறிப்பிட்ட நாட்களுக்குள் எழுத்து மூலமாக ஆணையாளர், வந்தவாசி நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

<u>ந.க.எண். 394/2018/அ1</u> <u>நாள்.23. 03.2018</u>

<u>அலுவலக குறிப்பு—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

043. வந்தவாசி நகராட்சி பகுதி வார்டு—14, சன்னதி தெருவில் திடீரென்று குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் குழாய் வெடித்து குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டதை சரிசெய்யும்பணி அவசர, அவசிய காரணத்தால் 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செலவினத் தொகை ரூ.49,493— ஆகும். நகரமன்ற அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகின்றது. மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0221/2018/இ1, நாள்.06.03.2018)

தீர்மானம்

044. 2018–2019ம் ஆண்டு முதல் 2020 –2021–ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கான குத்தகை இனம் கீழ்கண்ட விவரப்படி 27.03.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

குத்தகை இனம் –வரிசை எண். 1

வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பறைக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனத்திற்கு திரு.A. அந்தோணி, க.எண்.97/3, புதியக் கோட்டைத்தெரு, வந்தவாசி என்பவர் உச்சபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.86,000/– (ரூபாய் எண்பத்தாராயிரம் ) மட்டும் கொடுத்துள்ளார்.

குத்தகை இனம் –வரிசை எண்.2

வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பறைக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் திருமதி.ப.சுசீலா, க.எண்.56, கீழண்டைதெரு, நாவல்பாக்கம் கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் 16.03.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உச்சபட்ச தொகை ரூ.1,16,220/– ஐ ( ரூபாய் ஒரு இலட்சத்து பதினாராயிரத்து இருநூற்று இருபது மட்டும்) கொடுத்துள்ளார்.

குத்தகை இனம் –வரிசை எண்.4

வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட காஞ்சிபுரம் ரோட்டில் உள்ள நவீன ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 27.03.2018 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.75,699/–ஐ (ரூபாய் எழுபத்தைந்தாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) கொடுத்துள்ளார்.

குத்தகை இனம் –வரிசை எண்.5

வந்தவாசி நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் 27.03.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உச்சபட்ச தொகை ரூ.4,33,333/– (ரூபாய் நான்கு இலட்சத்து மூப்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று ) மட்டும் திரு.A.அஜீஸ், நெ.59, மக்தும் மரைக்காயர் தெரு, வந்தவாசி என்பவர் கொடுத்துள்ளார்.

குத்தகை இனம் –வரிசை எண்.3

வந்தவாசி நகராட்சி சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஒரு எடைபார்க்கும் கருவி அமைத்துக் கொள்ளும் உரிமம் 23.02.2018, 07.03.2018, 16.03.2018 மற்றும் 27.03.2018 தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

<u>குத்தகை இனம் –வரிசை எண்.6</u>

வந்தவாசி நகராட்சி பகுதிகளில் உள்ள பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமத்திற்கு 23.02.2018, 07.03.2018, 16.03.2018 மற்றும் 27.03.2018 தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

<u>குத்தகை இனம் –வரிசை எண்.7</u>

அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமத்திற்கு 23.02.2018, 07.03.2018, 16.03.2018 மற்றும் 27.03.2018 தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. 2018 – 2019ஆம் ஆண்டு முதல் 2020–2021ம் ஆண்டு வரை 3 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குத்தகை இனம் எண்.1,2,4,5 ஆகிய இனங்களுக்கு உச்சபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும், அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி செய்தித்–தாளில் விளம்பரம் செலவு மற்றும் அச்சகம் மூலம் பிரிண்டிங் செலவிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது ஏலம் மற்றும் குத்தகை ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் போகாத குத்தகை இனங்கள் வ.எண்.3,6,7 ஆகியவை மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2429/2017/அ1, நாள்.28.03 . 2018)

045. வந்தவாசி நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் பதிவேடு மற்றும் பிறப்பு இறப்பு படிவங்கள் அனைத்தும் 2017–2018ம் ஆண்டிற்கு தேவைப்படும் (Stationary Item) வாங்க அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான நேப்கோ பிரிண்டர்ஸ், கோ.ஆப்ரேட்டிவ் சுசைட் லிமிடெட், வேலூார், என்ற நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம், அவசியம் கருதி நகர்மன்ற தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1262/2018/இ1)

046. வந்தவாசி நகராட்சியில் குத்தகை இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கான குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 27.03.2018—ல் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விபரங்களை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | குத்தகை இனம் விபரம் |
|---|---|
| 1. | வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிப்பறைக்கு கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம். |

1. திருமதி.ப.சுசீலா, ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.85000/—
2. திருமதி.அமலாலூர்துமேரி,ஒப்பந்ததாரர்,ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ.85500/—
3. திரு.A.அந்தோணி, ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.86000/—

<u>அலுவலக குறிப்பு</u>

1. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில் ரூ.86000/— என உயர்ந்தபட்ச தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.A.அந்தோணி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2. குத்தகை வருவாய் அவசரம் கருதி திரு.A.அந்தோணி, ஒப்பந்ததாரருக்கு குத்தகை உரிமம் உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| வ.எண். | குத்தகை இனம் விபரம் |
|---|---|
| 2. | வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பறைக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |

| | |
|---|---|
| 1.திருமதி.ப.சுசீலா,<br>நாவல்பாக்கம் கிராமம்,<br>வந்தவாசி தாலுக்கா. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,16,220/— |

<u>அலுவலக குறிப்பு</u>

1. ஏற்கனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.முனுசாமி, த/பெ.முத்து என்பவர் ரூ.1,15,111/—க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். திருமதி.ப.சுசீலா என்பவர் ரூ.1,16,220/— என கூடுதலான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே கூடுதலான குத்தகை உரிமை தொகை ரூ.1,16,220/—க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.ப.சுசீலா என்பவர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2. குத்தகை வருவாய் அவசரம் கருதி குத்தகை ஒப்பந்ததாரருக்கு குத்தகை உரிமை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி

வழங்கலாம்.

வ.எண். குத்தகை இனம் விபரம்

3. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஒரு எடை பார்க்கும் கருவி அமைத்துக் கொள்ளம் உரிமம்.

<u>அலுவலக குறிப்பு</u>

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை.

வ.எண். குத்தகை இனம் விபரம்

4. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட காஞ்சீபுரம் ரோட்டில் உள்ள நவீன ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

1. திருமதி.ப.சுசீலா, ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.75,699/–
2. திரு.இ.மஜீத், ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.65,501/–

<u>அலுவலக குறிப்பு</u>

1. 01.04.2018 முதல் 31.03.2021 வரை ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலித்துக்கொள்ளும் உரிமைக்கு அதிகம் தொகை ரூ.75,699–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.ப.சுசீலா, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்–புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2. குத்தகை வசூல் அவசரம் கருதி கூடுதலான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தாரரான ப.சுசீலா, ஒப்பந்ததாரருக்கு குத்தகை உரிமை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

வ.எண். குத்தகை இனம் விபரம்

5. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.

1. திரு.ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,33,333/–
2. திரு.இ.மஜீத், ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,25,000/–

<u>அலுவலக குறிப்பு</u>

1. 2018 –2019 முதல் 2020 – 2021 வரையில் புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களுக்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு, சுங்க கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமைக்கு கூடுதலான ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.4,33,333/– என ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2. குத்தகை வசூல் அவசரம் கருதி உயர்ந்தபட்ச தொகை ரூ.4,33,333/– என ஒப்பந்தப்புள்ளிதாரர் திரு.ஆ.அஜீஸ் ஒப்பந்ததாரருக்கு குத்தகை உரிமை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

வ.எண். குத்தகை இனம் விபரம்

6. வந்தவாசி நகராட்சி பகுதிகளில் உள்ள பலன்தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமம்.

<u>அலுவலக குறிப்பு</u>

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை.

| வ.எண். | குத்தகை இனம் விபரம் |
|---|---|
| 7. | அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமம். |

<u>அலுவலக குறிப்பு</u>

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை.

1. குத்தகை இனம் வரிசை எண். 1,2,4,5 ஆகிய நான்கு இனங்களுக்கும் வைக்கப்பட்டுள்ள அலுவலக குறிப்புகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குத்தகை இனம் வரிசை எண்.3,6,7 ஆகிய இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. எனவே மேற்கண்ட வரிசை எண்.3,6,7ல் காணும் குத்தகை இனங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோர மன்ற அனுமதிக்கு வைக்கப்–படுகிறது.
3. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2429/2017/அ1, நாள்.28.03 . 2018)

047. 2017–2018ம் ஆண்டு முடியும் தருவாயில் உள்ள நிலையில் வரியினங்கள் அனைத்தும் (சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், கடை வாடகை, குத்தகை இனங்கள்) உடனடியாக வந்தவாசி நகராட்சி அலுவலகத்திற்கு செலுத்துமாறும், பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி விளம்பரம், நகராட்சியில் போதிய ஒட்டுநர்கள் இல்லாததால் நகராட்சி வாகனம் மூலம் தனியார் நிறுவனம் மூலம் ஒட்டுநர் ஒருவரை விளம்பம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | பெயர் மற்றும் முகவரி | ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | W.பஷீர், ஒப்பந்ததாரர், KSK நகர், வந்தவாசி. | 550.00 |
| 2 | ஆ.அஜீஸ்,ஒப்பந்ததாரர், மக்தும்மரைக்காயர் தெரு | 500.00 |
| 3 | இ.மஜீத், ஒப்பந்ததாரர், மீரா காதர் ஷா தெரு, வந்தவாசி. | 580.00 |

<u>அலுவலககுறிப்பு–</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆ.அஜீஸ், என்பவரது விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
3. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு. ஆ.அஜீஸ் என்பவரின் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் 11.02.2018 முதல் 31.03.2018 முடிய விளம்பம் செய்ய உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினம் ரூ.24,000/— மன்றம் அங்கீகரிக்கலாம்.
    1. 11.02.2018 முதல் 28.02.2018 —— 9000/— (18 நாட்கள்)
    2. 01.03.2018 முதல் 31.03.2018 ——15500/— (31 நாட்கள்)

(ந.க.எண்.0092/2017/அ1, நாள்.09.02.2018)

தீர்மானம்

048. வந்தவாசி நகராட்சியில் போதிய எழுத்தர் பணியிடங்கள் பற்றாக்குறை உள்ளதால் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அலுவலக பணிகள் பாதிக்காத வண்ணம் பொது மக்களின் நலன் கருதியும், பிரிவு எழுத்தர்கள் பணிகளை கூடுதலாக எழுத்துப் பணிகள் மேற்கொள்ளவும், அரசாணை நிலை எண்.170/2009, நாள்.18.12.2009—ன் வழிகாட்டுதலின்படி நிபந்தனை வ.எண்.1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும் எழுத்தர் பணிக்கு திரு.R.சண்முகம் என்பவரை பிரதிமாதம் ரூ.7000/— வீதம் 12 மாதத்திற்கு (ஒரு ஆண்டிற்கு) எழுத்தர் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு—</u>

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. நகராட்சியில் போதிய எழுத்தர் பணியிடங்கள் பற்றாக்குறையாக உள்ளதால் அவசர அவசியம் கருதியும், பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் அரசாணை நிலை எண்.170/2009, நாள்.18.12.2009ன்படி நிபந்தனை வரிசை எண்.1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு எழுத்தர் பணியினை தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும் மேற்கொள்ள பிரதிமாதம் ரூ.7000/— வீதம் (12—மாதத்திற்கு) ஒரு ஆண்டு காலத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.141/2018/எச்1, நாள்.09.02.18)

தீர்மானம்

049. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் HDPE டேங்க் வைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நகர் பகுதியில் அவசரமாக தேவைப்படும் இடங்களுக்கு குடிநீர் டேங்கர் லாரி மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் டேங்கர் லாரி பழுதடைந்துள்ளது. பழுதை சரி செய்யும் பொருட்டு பணிமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகையால் தனியார் டேங்கர் லாரி மூலம் வாடகை அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வகையில் 23.02.2018 முதல் 31.03.2018 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.72,150/– (எழுபத்ரெண்டாயிரத்து நூற்றி ஐம்பது மட்டும்). மேற்படி பணி அவசிய அவசர காரணத்தால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி செலவு மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 0234/2017/இ1, நாள்.31.03.18)

**தீர்மானம்**

050. வந்தவாசி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரப்புரையாளர்கள் வீடுவீடாக சென்று கழிவறை கணக்கெடுப்பு பணி முடித்த பிறகு அலுவலகத்தில் வந்து அமருவதற்கு உரிய இருக்கை ஏதும் இல்லாததால் அவர்களுக்கு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் பென்ச் மற்றும் டெக்ஸ் இரண்டு செட் செய்துகொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி பென்ச் மற்றும் டெஸ்க் செய்து கொண்டதற்குரிய தொகை ரூ.14,200/– வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். 0210/2018/எச்1, நாள்.20.02.18)

**தீர்மானம்**

051. பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் டிப்பர் லாரியின் பேட்டரி பழுதடைந்துள்ளதால் அதனை இயக்குவதந்கு அடிக்கடி சிரமம் ஏற்படுவதால் அதனை மாற்றி புதியதாக பேட்டரி ஒன்று அவசரம் அவசியம் கருதி வாங்கி கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி பொது சுகாதாரம் நலன் கருதி பேட்டரி வாங்கியமைக்கு உண்டான செலவினம் மன்றம்

அனுமதிக்கலாம்.

பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் டிப்பர் லாரியின் பேட்டரி புதியதாக சப்ளை செய்ய மூன்று விலைப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஆலி ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், காஞ்சிபுரம் சாலை, வந்தவாசி. | 9870.00 |
| 2. | ஸ்ரீவினாயக ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், பேட்டரி சுவீஸ் காஞ்சிபுரம் சாலை, வந்தவாசி. | 10300.00 |
| 3. | ஸ்ரீஅம்மன் ஆட்மோ எலக்ட்ரிகல்ஸ், பேட்டரி சர்வீஸ், மேல்மருவத்துார் சாலை, வந்தவாசி. | 10800.00 |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அலி ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், காஞ்சிபுரம் சாலை வந்தவாசி என்வருக்கு பேட்டரி சப்ளை செய்ய உத்திரவு வழங்கலாம்.

(ந.க.எண்.    /2018/எச்1, நாள்.01.03.18)

**தீர்மானம்**

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி